**பீபல்ஸ் டிரவல்ஸ் பிரைவட் லிமிடட் - 2018/2019**

-----------------------------------------------------------------------------------

**1.1 அபிப்பிராயம்**

பீபல்ஸ் டிரவல்ஸ் பிரைவட் லிமிடட் (People's Travels Private Limited**)** நிறுவனத்தின்("கம்பனி") 2019மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றுமற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளினதும் ஏனைய விளக்க தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2019மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இக் கணக்காய்வை மேற்கொள்வதற்கு பொதுத் தொழிலிலுள்ள பட்டயக் கணக்காய்வாளர் நிறுவனம் ஒன்று எனக்கு உதவியது. பாராளுமன்றத்திற்குஅறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

கம்பனியின்2019மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்குஇணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி

இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனி வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் மீதான கணக்காய்வின் போது கணக்காய்வாளரின் பொறுப்பு

------------------------------------------------------------------------------------------------------------

மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய அனைத்து பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டை பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடு என்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளபபடுகின்ற கணக்காயவில் பொருண்மையான பிறழ் கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவது இல்லை. பிறழ் கூற்றுக்கள் ஆனவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடும் என்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளதார தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்தில் எடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர் தொழில் ஐயப்பாட்டினை பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்குஉள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள்கம்பனிதொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின்செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனிஅதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின்வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 பெற வேண்டிய கடன்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| கடன்பட்டோர் மீதி ரூபா 37,839,539 அல்லது மொத்த கடன்படுநர் மீதியில் 81% ஆனது அரச நிறுவனங்களிடமிருந்து பெற வேண்டியவையாகும். இந் நிறுவனமானது 15 நாள் கடன் கொள்கையை மேற்கொண்டிருந்த போதிலும் ரூபா 31,812,280 பெறுமதியான பெற வேண்டிய கடன் 01 மாத காலத்திற்கு மேலாக நிலுவையாக இருந்ததுடன் நிறுவனத்தினால் குறிப்பிட்ட கடன் காலத்திற்குள் இக்கடனை அறிவிடமுடியாதிருந்தது. மேலும் நீண்டகாலமாக நிலுவையிலுள்ள கடனாளிகளின் நிலுவையை மீட்டெடுக்க நிறுவனம் நடவடிக்கையை மேற்கொள்ளவில்லை. | வணிகத்தின் தொடர்ச்சியான இயக்கத்திற்கு வழமையான வாடிக்கையாளர்களை தக்கவைத்துக் கொள்வதற்காக நீடிக்கப்பட்ட கடன்களைக் குறைப்பதில் நாங்கள் ஆழ்ந்த அக்கறை கொண்டுள்ளோம். மேலும் மிகக்குறைந்த எண்ணிக்கையான கணக்குகளுக்கு ஒரு மாதத்திற்கு மேல் நாங்கள் கடனை நீடிக்கும் போது நிறுவனத்திற்கு எந்தவிதமான நிதி இழப்பும் ஏற்படாது என்பதை உறுதி செய்வதோடு கணிசமான அதிக இலாபத்தை நாங்கள் பெறுகிறோம். எவ்வாறாயினும் நிலுவையாக உள்ள ஊழியர்களின் கடன்களை 31 டிசம்பர் 2019 இறுதிக்குள் அகற்றுவதற்கான நடவடிக்கைகளை நாங்கள் மேற்கொள்வோம். | இந்த நிலுவைகளை மதிப்பாய்வு செய்து நிலுவைகளை மீட்டெடுக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுக்கு இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| கொள்முதல் நடைமுறை பி.பீ இலக்கம்.03/2017 | ரூபா.130,254 மற்றும் ரூபா.54,350 பெறுமதியான இரண்டு பெயர்பலகைகள் முறையே 19 டிசம்பர் 2018 மற்றும் 19 யூன் 2018 ஆம் திகதிகளில் வாங்கப்பட்டபோதும் இது நிறுவனத்தின் கொள்முதல் | கண்டி மற்றும் குருநாகல் அலுவலகங்களுக்கு பெயர்பலகைசெய்வதற்காக செலவுகள் செய்யப்பட்டன. கண்டி நிறுவனத்தின் பெயர் பலகையில் சில திருத்தங்கள் செய்வதற்கான கடந்த ஆண்டும் விளம்பரங்களை மேற்கொண்ட ஆர்க் விளம்பர நிறுவனம் தெரிவு செய்யப்பட்டு 19 டிசம்பர் 2018 இல் ரூபா 130,254 | தொடர்புடைய கொள்வனவு நடைமுறைகளுக்கு இணங்க வேண்டும் |

| | |
|---|---|
| நடைமுறைக்கு இணங்க விலைகோரப்படாது கொள்முதல் செய்யப்பட்டிருந்தது. | செலவு செய்யப்பட்டதுடன் குருநாகல் நிறுவனத்தின் பெயர்பலகையானது ஆசில் விளம்பர நிறுவனத்திடம் 19 யூன் 2018 இல் ரூபா 54,350 க்கு மேற்குறிப்பிடப்பட்ட காரணத்தினால் வழங்கப்பட்டது. |

### 1.6.1 வரிப்பிரமாணங்களுக்கு இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| பெறுமதி சேர்க்கப்பட்ட வரிச்சட்டம் 2002 இன் 14 ஆம் இலக்க மற்றும் திருத்தம் | நிறுவனமானது பல ஆண்டுகளாக சுற்றுப்பயண தரகுவருமானத்தைவற்வரி விலக்கப்பட்ட வழங்களாக கருதிய போதிலும் எங்கள் அடையாளத்தின் பேயரில் நடப்பு ஆண்டு அவுட் பவுண்ட் (Out Bound)தரகு வருமானத்திற்கு அமையதேவையான பொறுப்பு ரூபா.3 மில்லியனை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. | உங்கள் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்த வாறு இது குறித்து தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது | சட்டத்திற்கு அமைய வற் (VAT) பொறுப்பை அடையாளம் காண வேண்டும். |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதிவிளைவுகள்

வழங்கப்பட்ட நிதி அறிக்கைகளின்படி, நிறுவனத்தின் செயற்பாடுகளின் மூலம் பெறப்பட்ட வரிக்கு முந்திய நிகர இலாபம் ரூபா11,976,442 ஆக பதிவு செய்யப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் வரிக்கு முந்திய நிகர இலாபம் ரூபா 19,317,786 ஆகும். நிதி விளைவுகளில் ரூபா 7,336,344 அல்லது 37.9 சதவீதம் வீழ்ச்சியொன்றும் அவதானிக்கப்பட்டது. விணியோகம் மற்றும் நிர்வாக செலவுகளில் ஏற்பட்ட அதிகரிப்பு முறையேரூபா.1,457,638 அல்லது 29 சதவீதம் மற்றும் ரூபா 6,813,948 அல்லது 20 சதவீதம் என்பன இவ் வீழ்ச்சிக்கான பிரதான காரணமாகும்.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 நிதிகளின் பயன்பாட்டின் கீழ்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| பின்வரும் எடுத்துக்காட்டுகளின் படி எந்தவொரு காப்பீட்டுத்தொகையும் இல்லாமல் நிறுவனம் கணிசமான தொகையை கையில் வைத்திருக்கின்றது. எனவே காப்பீட்டுத்தொகையை எடுக்காமல் தினசரி பெரிய தொகைப் பணத்தை கையில் வைத்திருப்பது நிறுவனத்திற்கு ஆபத்தானது ஆகும்.<br>உதாரணமாக :-<br>i. 17/04/2018 இல் ரூபா.537,000<br>ii. 22/08/2018 இல் ரூபா.682,500<br>iii. 30/08/2018 இல் ரூபா.549,800<br>iv. 26/02/2019 இல் ரூபா.534,000<br>v. 27/03/2019 இல் ரூபா.822,800 | காப்பீட்டுத்திட்டத்திற்கு செல்வதன் மூலம் அல்லது உங்கள் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளபடி கையிலுள்ள பணத்தைக் குறைப்பதன் மூலம் கையில் அதிகபடியான பணத்தை பராமரிப்பதன் சாத்தியமான அபாயங்கள் குறித்து தேவையான நடவடிக்கைகள் எடுக்க நிறுவனம் பரிசீலிக்கும். | ஆபத்தைக்குறைக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். |

**4. பொறுப்புக் கூறல் மற்றும் நல்லாட்சி**

**4.1 கூட்டிணைக்கப்பட்ட திட்டம்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| கூட்டிணைக்கப்பட்ட திட்டமானது கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | பதிலளிக்கப்படவில்லை | நிறுவனம் ஒரு கூட்டிணைக்கப்பட்ட திட்டத்தை தயாரிக்க வேண்டும். இது வணிக அலகுகளுக்கு செயல் திறனை வழங்குவதற்காகன மூலோபாயத்தை வழங்குகின்றது மற்றும் உள் மற்றும் வெளிப்புற பங்குதாரர்களின் எதிர்பார்புக்களை அல்லதுநிருவனத்தின் வளர்ச்சியில் அக்கரை உள்ளோரை உருவாக்குகின்றது. |

## 4.2 வருடாந்த செயல்திட்டம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| வருடாந்த செயல்திட்டம் நிருவனத்தால் தயாரிக்கப்படவில்லை. | பதிலளிக்கப்படவில்லை | கூட்டிணைக்கப்பட்ட திட்டத்தின் ஒரு பகுதியாக நிருவனம் இச் செயற்திட்டத்தை தயாரிக்க வேண்டும். இதில் பூர்த்தி செய்யப்பட்ட திட்ட நடவடிக்கைகள் சேர்க்கப்படுகின்றன. இது நிருவனத்தின் இலக்குகளை அடைவதற்கு வேண்டிய பணிகளின் பட்டியளைக் கொண்டுள்ளது. |

## 4.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| வருடாந்த பாதீடு நிருவனத்தால் தயாரிக்கப்படவில்லை. | பதிலளிக்கப்படவில்லை | வணிகத்திற்கும் அதன் நிதிகளுக்கும் ஒரு கட்டமைப்பை உருவாக்க தேவையான திட்டமிடல் கருவியாக நிறுவனம் ஒரு பாதீட்டைத் தயாரிக்க வேண்டும். |